

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) தேவிபாலியம்மன் மற்றும் இளங்காளியம்மன் திருக்கோயில் சார்பில் கொளத்தூர், இராஜாஜி நகரில் 11.88 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூத்த குடிமக்கள் உறைவிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், லோகோ ஸ்கீம் 1வது தெருவில் 2 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முதல்வர் விளையாட்டரங்கத்தை திறந்து வைத்து, குத்துச் சண்டை பயிற்சியை பார்வையிட்டார். உடன், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக் ஆகியோர் உள்ளனர்.

### அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 11 அரசு பல்கலைக் கழகங்களில்

# “நான் முதல்வன்” திட்ட பல்கலைக் கழக செயல்பாட்டு மையங்கள்!

## காணொலி மூலம் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 4–

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 23 மாவட்டங்களில் திறனகங்களையும் அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட 11 அரசு பல்கலைக் கழகங்களில் நான் முதல்வன் திட்ட பல்கலைக் கழக செயல்பாட்டு மையங்களையும் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2026) சென்னை குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக 23 மாவட்டங்களில் திறனகங்களை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் அண்ணா பல்கலைக் கழகம் உள்ளிட்ட 11 அரசு பல்கலைக் கழகங்களில் நான் முதல்வன் திட்ட பல்கலைக் கழக செயல்பாட்டு மையங்களையும் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் மாநில திட்டக்குழு இடையே United Nations Development Programme (UNDP) தொழில்நுட்ப ஆதரவுடன், நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துதல், நிலையான செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த தொழில் வழிகாட்டுதல் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் IIT Madras இடையே மாவட்ட திறன் அலுவலர்கள் மற்றும் திட்ட நிர்வாகிகளுக்கான பயிற்றுநர் பயிற்சி (ToT) மற்றும் தொழில் வழிகாட்டல் பயிற்சி திட்டத்தை செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

துணை முதலமைச்சர் அவர்கள் 2024-2025-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க அனைத்து மாவட்டங்களிலும் ஒரு மாவட்ட திறன் மையம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

இவ்வறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில் 38 மாவட்டங்களிலும் மொத்தம் 5.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் “திறனகம்” எனும் சிறப்பு மாவட்ட திறன் மையங்களை நிறுவியுள்ளது.

ஒவ்வொரு திறனகமும் கணினி வசதி, குளிர்சாதன வசதி, உபகரணங்கள் மற்றும் பிற அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் ஒரே இடத்தில் தொழில் வழிகாட்டல், திறன் மேம்பாட்டு ஆலோசனை, பயிற்சி இணைப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றை வழங்கும் ஒருங்கிணைந்த சேவை மையமாக செயல்படும். இம்மையங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டலில் மாவட்ட திறன் அலுவலர்களால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் (TNSDC) ஆதரவுடன் நிர்வகிக்கப்படவுள்ளன.

‘நான் முதல்வன்’ திட்டம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் மற்றும் ITI மாணவர்களுக்கு எவ்வித நிதிச்சுமையும் இன்றி கல்வியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், வழிகாட்டிகள் மற்றும் நிர்வாகிகள் மூலம் திறன்களை வளர்க்கும் வகையில் ஒருங்கிணைந்த திறன் பயிற்சி வகுப்புகளை வழங்கி வருகிறது.

துணை முதலமைச்சர் அவர்கள் 2025--2026 ஆண்டு அறிவிப்பில் தமிழ்நாடு முழுவதும் உள்ள 10 மாநில கலை மற்றும் அறிவியல் மற்றும் ஒரு தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் நான் முதல்வன் திட்டத்திற்காக பல்கலைக்கழக “செயல்பாட்டு மையங்கள்” 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்று அறிவித்தார்.

இந்த ‘நான் முதல்வன்’ பல்கலைக்கழக செயல்பாட்டு மையங்கள் நான் முதல்வன் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் (NMUOC) ஒரு Nodal Centre ஆக செயல்படும். தொழில் துறைக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பாடப்பிரிவுகளைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களோடு இந்த மையங்கள் ஒருங்கிணைக்கும். மாணவர்களுக்கு Internship, மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்க இந்த மையங்கள் உதவும். மாணவர் சேர்க்கை, திறன் சான்றிதழ் பெறுதல் மற்றும் வேலைவாய்ப்பு புள்ளி விவரங்களைக் கண்காணிக்க இந்த மையங்கள் உதவும்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், திட்டம் மற்றும் வளர்ச்சி துறைச் செயலாளர் சஜ்ஜன் சிங் ரா சவான், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலாளர் (மு.கூ.பொ) திருமதி எஸ்.சுதா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை!

# எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவித்தார்!

*சென்னை, மார்ச். 04 -*

*சென்னை கிழக்கு மாவட்டம், மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2026 - மனிதநேய 27, தமிழரின் வாழ்வில் ஒளி பிறந்தது! சரித்திரம் தொடர நிலம் மலர்ந்தது! எனும் தலைப்பில் நேற்று (03.03.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில், எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை வகித்தார்.*

*மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், கோ. ஏகப்பன், கே.எஸ்.எம். நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ.மணி, புரசை ஜி. தாமோதரன், வே. உமாகாந்த், க.நந்தீஸ்வரன், அ.நிர்மலா தேவி, எல்.சுந்தர் ராஜன், கே.கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*ஜெ. பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, த.ஜெயக்குமார், பா.பிரபாகரன், இ.பி.கார்த்திக், என்.ஜெ.மதன்குமார், ஆ.அஜித்குமார் (எ) ஜெபா, ஏ.ஆர்.யாசர் அரபாத், பி. டெல்லி கணேஷ், சே. பாலாஜி, ரா.கார்த்திக், பா. சங்கர், ஐ.சூரியா, அ.அவினேஷ், கோ.சந்தோஷ்குமார், மு.முகமது பிலால், லோ.சுகுமாரன், ஜெ.சிலம்பரசன் ஆகியோர் வரவேற்றனர்.*

*மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அணிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், செய்தி தொடர்பு துணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, ப.மீ.யாழினி, பரிதி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*வட்டக் கழகச் செயலாளர்கள் டால்பின் எஸ்.ஹரி, இ.மொய்தீன் ஆகியோர் நன்றி கூறினார்.*

### கோவை – ஈரோடு – சேலம் உள்ளிட்ட

# மேற்கு மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

## மாநில செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

கோவை, ஈரோடு, சேலம் உள்ளிட்ட மேற்கு மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (4.3.2026 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில், கரூர் மாவட்டம் திருமுருகன் மண்டபத்தில் முன்னாள் அமைச்சர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்திபாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில் , பொறியாளர் அணியின் தலைவர் துரை.கி.சரவணன், பொறியாளர் அணியின் கோவை மண்டல பொறுப்பாளர் கு.சண்முகசுந்தரம், ஈரோடு மண்டல பொறுப்பாளர் அம்பாள்.நந்தகுமார், சேலம் மண்டல பொறுப்பாளர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது.

கோவை, ஈரோடு, சேலம் மண்டல பொறியாளர் அணியின் மாவட்ட, மாநகர், பேரூர்,ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:**

திருச்சியில் 9.3.2026 அன்று நடைபெற உள்ள கழக நிர்வாகிகள் மாநாடு வருகைக்காக.

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர்
மாநில பொறியாளர் அணி

### புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில்

# முதலமைச்சர் - கழக தலைவர் பிறந்த நாள் விழா! பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

## இ.கண்ணப்பன் தலைமையில் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார், என்.மகேஷ்குமார், வி. சிவபிரகாஷ் பங்கேற்பு !

*மாதவரம், மார்ச். 4-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 73 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.*

*மாதவரம் வடக்கு தொகுதி 16-வது வட்டத்துக்கு உட்பட்ட கண்ணியம்மன் பேட்டை சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் படிக்கின்ற பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகளாக பென்சில், பேனா, ரப்பர், நோட்டு புத்தகம் ஆகியவை வழங்கப்பட்டன. முன்னதாக பள்ளி மாணவ மாணவிகள் கேக் வெட்டி முதலமைச்சரின் பிறந்த நாளை உற்சாகமாக கொண்டாடினார்கள். கழக நிர்வாகிகள் குழந்தைகளுக்கு கேக் ஊட்டி மகிழ்ந்தனர்.*

*மேலும் மாணவ மாணவிகள் தங்களுக்கு தினந்தோறும் காலை உணவு வழங்கப்படுவதால் தினந்தோறும் புத்துணர்ச்சியாக படிப்பதாகவும், இலவசமாக பாட புத்தகம் வழங்குவதால் நாங்கள் திராவிட மாடல் அரசில் பயன்படுவதாகவும் அதனால் முதலமைச்சருக்கும் நன்றி தெரிவித்தனர்.*

*16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பகுதி துணை செயலாளர் கே. சிவசங்கரன், மாவட்ட பிரதிநிதி நா. மோகன் குமார், என்.மகேஷ்குமார், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், முன்னாள் கடப்பாக்கம் வட்ட பிரதிநிதி நீதி, குளக்கரை மஞ்சுநாதன், சாம், 17 வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வக்கீல் எம். என். தளபதி,புழல் குபேரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.*

*முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை பெற்றுக் கொண்ட மாணவர்களும், பள்ளி ஆசிரியர்களும், முதலமைச்சருக்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.*



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு 16வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதில் அமைந்துள்ள சென்னை துவக்கப்பள்ளியில் படிக்கும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. 16 வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார்,என். மகேஷ்குமார்,நீதி, எலந்தனூர் வி.சிவ பிரகாஷ், எம். என். தளபதி, எஸ். மஞ்சுநாதன், சாம். குபேரன் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை தொடங்கியது!

சென்னை, மார்ச் 4 –

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1ந்தேதி மாணவர் சேர்க்கை தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2026–27 ம் புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நேற்று முன்தினம் தொடங்கியது. சைதாப்பேட்டையில் உள்ள சி.எஸ்.ஐ. நடுநிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் 35 ஆயிரம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை மாணவ–மாணவிகளை சேர்ப்பதற்கான பணிகள் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு 4 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டனர். இந்த ஆண்டு 5 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கல்வி அதிகாரிகள் அரசு பள்ளிகளில் மாணவர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கையில் தீவிரம் காட்ட வேண்டும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

சென்னையை பொருத்தவரையில் மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் 300க்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளன. அரசு பள்ளிகள் மிகக் குறைந்த அளவிலே செயல்படுகிறது. மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்தி அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளரும் - திருவள்ளூர் நகர்மன்ற உறுப்பினருமான கு.பிரபாகரன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 03.03.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா என். இராமசாமி

**மார்ச் 4 (2022)**



**தனது இளம் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**தஞ்சை நகரத்தில் வட்ட பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**1962ம் ஆண்டு தஞ்சை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் போட்டியிட்டபோது, வாக்குச் சாவடி முகவராக பணியாற்றியவர்.**

**1976 நெருக்கடி காலத்தில் ‘ஜனநாயக கொலைகாரி இந்திரா ஒழிக’ என வாசகத்தை சுவர்களில் எழுதியதால், உள்நாட்டு தேசிய பாதுகாப்பு (மிசா) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் ஒன்பது மாதம் தனிமை சிறைவாசம் அனுபவித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.